NETHRODAYA
Let's share the light

15 January 2013

பெறுநர்

இயக்குனர்,
அரசு தேர்வுகள் இயக்குனரகம்,
DPI, கல்லூரி சாலை,
சென்னை

**பொருள்**: (மிக அவசரம்) இணையதள தேர்வு விண்ணப்பத்தில் உள்ள குறைபாட்டினை நீக்க கோருதல் தொடர்பாக.

**பார்வை**:

1. Management of Government of India Websites, Guidelines for IT Managers
2. Chief Commissioner for Persons with Disabilities, Ministry of Social Justice and Empowerment, Letter.Ref.No.9-2(BFE)/CCD/2005 (Vol.II) dated 24th January, 2012
3. http://www.dge.tn.nic.in/hscprivate/webadddetail.aspx
4. TNPSC one time online registration copy
5. மேல்நிலைத் தேர்வு, மார்ச் 2013, தனித்தேர்வர் அனுமதி அறிவுரைகள்
6. Guidelines for conducting Higher Secondary Examination.
7. மாற்றுத்திறன் தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும் முறை, தினத்தந்தி நாள்: 12.01.2013, பக்கம்: 10

நேத்ரோதையா நிறுவனம், கிராமப்புறங்களில் இருந்து கல்விப் பயில்வதற்காக வரும் பார்வையற்ற மற்றும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக உணவு மற்றும் இருப்பிட வசதி செய்து தடையில்லாமல் அவர்களது கல்வி தொடர வழி வகை செய்து வருகிறது.

**விளக்கம்:**

பார்வை ஒன்றில் கண்டவாறு இந்திய அரசு வலைத்தளங்களின் மேலாண்மை வழிகாட்டி நெறிமுறையில், பயன்படுத்தத்தக்க நெறிமுறைகள் என "A Government website being universally accessible would imply that a broad range of software, hardware and audiences, including

47/1, Nolambur Phase II,Mogappair West, Chennai-600037,
Tamil Nadu, India. Phone :+ 91 44 26565012/26563680
Mobile :+ 91 93828 96636 E mail :nethrodaya@gmail.com Website :www.nethrodaya.org
DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX UNDER SECTION 80G OF THE I.T. ACT, 1961

physically challenged citizens can not only access the online content and services on the website but are also able to actually make use of it. The World Wide Web Consortium's (W3C) Web Accessibility Initiative (WAI) is an internationally agreed recommendation for website accessibility for with special needs and it is expected of the Government websites to follow these standards" குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழிமுறைகள், அரசு தேர்வுகள் இயக்குனரகம் இணையதளத்தில் மீறப்பட்டுள்ளது.

பார்வை இரண்டில் கண்டவாறு மாற்றுத்திறனாளிகளுக்கான இந்திய தலைமை ஆணையர் பின்வருமாறு ஆணையிட்டுள்ளார் " Make all the Government websites accessible by complying with the least web content accessibility guidelines" இவ்வாணையும் கடைப்பிடிக்கப்படவில்லை.

பார்வை மூன்றில் கண்டாவாறு மாற்றுத்திறனாளிகள் சம வாய்ப்பு சம உரிமை முழு பங்கேற்பு சட்டம் 1995 ன் அடிப்படை நோக்கம் அரசு தேர்வுகள் இயக்குனரக மேல்நிலைத் தேர்வு விண்ணப்பத்தில் மீறப்பட்டுள்ளது. எவ்வாறெனில்

மாற்றுத்திறனாளியா ஆம் () இல்லை ()

எவ்வகை மாற்றுத்திறனாளி ________________________
(ஆம் எனில்)

எழுத்தர் உதவி தேவையா ஆம் () இல்லை ()

மேற்கண்ட எந்த வினாவும் இணையதள விண்ணப்பத்தில் இடம்பெறவில்லை.

பார்வை நான்கில் கண்டவாறு தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து தேர்வுகளுக்கும் தலைமை வழிகாட்டி நெறிமுறைகளை கொண்டுள்ளதும் இந்திய அரிசியல் அமைப்பு சட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள ஆணையம், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மேற்கண்ட மாற்றுத் திறனாளிகளுக்குரிய பங்கேற்பு உரிமைகளை வழங்கியுள்ளது. இதனை கீழ்க்கண்டவாறு காணலாம்.

Are you a Differently abled person? ______________________

Type of Disability ______________________

Percentage of Disability ______________________

Do u a need a scribe ______________________

பார்வை ஐந்தில் கண்டவாறு மேல்நிலைத் தேர்வு, மார்ச் 2013, தனித்தேர்வர் அனுமதி அறிவுரைகள் பகுதியில் பார்வையற்ற மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு எந்தவிதமான அறிவுரைகளும் வழங்கப்படவில்லை. குறிப்பாக பார்வையற்ற மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு எழுத்தர் உதவி இலவசமாக வழங்கப்படவேண்டும் என்பது ( PWD Act 1995) அடிப்படையில் சட்ட உரிமையாகும். இவ்வுரிமை மீறப்பட்டுள்ளது.

பார்வை ஆறில் கண்டவாறு மேல்நிலைத் தேர்வுகள் நடத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் பகுதியில் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு (School Students) " Under Concession heading , Blind Candidate – Fee exemption and appointment of scribe" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நெறிமுறையில் நேரடித் தனித் தேர்வர்களுக்குரிய (Direct Private Candidate) நெறிமுறைகளில் எந்த இடத்திலும் பார்வையற்ற மாற்றுத்திறனாளி குறித்த அறிவிப்பு இடம் பெறவில்லை. மேலும் அவர்களுக்கு தேர்வு கட்டண விலக்கு குறித்த தகவலும் குறிப்பிடவில்லை.

பார்வையற்ற மாற்றுத்திறனாளி நேரடித் தனித் தேர்வர்களுக்கு எழுத்தர் உதவி (Scribe assistance) வழங்கப்படுமா ? இல்லையா? என்றும் எழுத்தர் உதவியாளர்க்கு எழுத்தர் உதவி ஊழியம் ( Scribe Assistance fee) பற்றியும் குறிப்பிடவில்லை. இவ்வாறு வழிகாட்டி நெறிமுறையில் மாற்றுத்திறனாளிக்குரிய இன்றியமையாத உரிமைகள் வழங்காமல் மறுக்கப்பட்டுள்ளது.

பார்வை ஏழில் கண்டவாறு, அரசு தேர்வுகள் இயக்குனர் மாற்றுத்திறனாளி தனிதேர்வர்கள் இணையதள விண்ணப்பத்தில் மாற்றுத்திறனாளி குறித்த தரவுகளை பதிவு செய்ய எந்த வழிமுறைகளும் வழங்கப்படவில்லை. இதனால் மாற்றுத் திறனாளிகள் அலைகழிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இணையதள விண்ணப்பத்தில் மாற்றுத்திறனாளி என்பதனை உறுதிசெய்ய எந்த ஒரு வழிமுறையும் இல்லை. இந்நிலை வருந்தத்தகது.

மேற்கூறிய விளக்கங்களின் அடிப்படையில் பின்வரும் நிவாரணங்கள் கோரப்படுகின்றன.

**நிவாரணம்**

47/1, Nolambur Phase II,Mogappair West, Chennai-600037,
Tamil Nadu, India. Phone :+ 91 44 26565012/26563680
Mobile :+ 91 93828 96636 E mail :nethrodaya@gmail.com Website :www.nethrodaya.org
DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX UNDER SECTION 80G OF THE I.T. ACT, 1961

NETHRODAYA
Let's share the light

1. பார்வையற்ற மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு இணையதள விண்ணப்பத்தில் தன்னைப் பற்றிய விவரங்களை பதிவு செய்ய உரிமை வழங்கப்பட வேண்டும்.

2. 18.01.2013 விண்ணப்பிக்க இறுதி நாளாக உள்ளதால், இணையதள விண்ணப்பத்தில் மாற்றுத்திறனாளிகள் குறித்த தகவல்களை பதிவு செய்ய உரிய வழிமுறைகள் செய்யும் வரை மேல்நிலைத் தேர்வுக்கு இணைய வழி விண்ணப்பிக்கும் இறுதி நாளினை நீட்டிக்க வேண்டும்

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

C.கோவிந்தகிருஷ்ணன்
நிறுவனர்-நேத்ரோதையா
மாநில திட்டக்குழு
மாற்றுத்திறனாளிகளுக்கான
குழு உறுப்பினர்

47/1, Nolambur Phase II,Mogappair West, Chennai-600037,
Tamil Nadu, India. Phone :+ 91 44 26565012/26563680
Mobile :+ 91 93828 96636 E mail :nethrodaya@gmail.com Website :www.nethrodaya.org
DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX UNDER SECTION 80G OF THE I.T. ACT, 1961